1982 பிப்ரவரி 5]

நிலத்தில் பங்களா கட்டும் அளவுக்கு அரசு அதிகாரிகள் எப்படி அனுமதித்தார்கள்? குடிசை போட்டால் கூட பிரித்துப் போடு கிறவர்கள் எப்படி பங்களா கட்ட அனுமதித்தார்கள்? அதை உடனடியாக அப்புறப்படுத்தி அவர் மீது நடவடிக்கை எடுக்கப் படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: அந்த நிலம் அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்டது என்பது சரியல்ல. அரிசனங்கள் அல்லாதவர்களுக்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்படி ஒதுக்கப் பட்டவர்களின் சம்மதத்தின் பேரில் கட்டிடம் கட்டப்பட்டிருக் கிறது. அதுபற்றி அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்த பிறகு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. எல். இளையபெருமாள்: அமைச்சர் அவர்கள் அந்த நிலம் அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்டது அல்ல என்று சொல்லு கிறார்கள். ஆனால் அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்ட கன்டிஷன் பட்டா என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. பல இடங்களில் இப்படி ஏழை எளியவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் அவர் களைப் பயமுறுத்தி அல்லது அதிகப் பணம் கொடுப்பதாகச் சொல்லி அந்த நிலத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி எடுத்துக் கொண்டவர்களிடமிருந்து நஷ்டஈடு வாங்கி அந்த ஏழை எளியவர்களுக்கு உதவி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: கன்டிஷன் பட்டா என்பது அரிசனங்களுக்கு மட்டுமல்லாது மற்றவர்களுக் கும் கொடுக்கப்படுகிறது. இந்த நிலங்கள் அரிசனங்களுக்கு ரிசர்வ் செய்யப்பட்ட நிலங்கள் அல்ல என்பதைத் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அரசு ஆட்சிக்கு வந்த பிறகு, இப்படி கொடுக்கப்பட்ட நிலங்களை எல்லாம் பலர் விற்று விடு கிறார்கள் என்பதைக் கண்டு பிடித்து அதன் பேரில் நடவடிக்கை எடுத்து வருகிறோம். இதற்காக தனியாக அலுவலர்களைப் போட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டதில் இதுவும் கண்டு பிடிக்கப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### தொழில் நுட்பக் கல்லூரி ஆசிரியர்களுக்கும் விருது வழங்கும் திட்டம்.

*வினா எண் 46—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) ஆசிரியர்களுக்கு மாநில அரசு விருது வழங்குவது போன்று தொழில் நுட்பக் கல்லூரி ஆசிரியர்களுக்கும் விருது வழங்க வேண்டுமென்று தொழில்நுட்பக் கல்வி வாரியம் தமிழக அரசிற்குப் பரிந்துரை செய்துள்ளதென்பது உண்மையா?

1982 பிப்ரவரி 6]

(ஆ) ஆம் எனில், இது பற்றி அரசு என்ன முடிவு செய்துள்ளது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) 1980–81ஆம் ஆண்டு முதல் பல்தொழிற் பயிலகங்களில் பணிபுரியும் ஆசிரியர் எழுவருக்கும், பொறியியற் கல்லூரியில் பணிபுரியும் ஆசிரியர் மூவருக்கும் ஆகப் பத்துப் பேருக்கு, ஒவ்வொருவருக்கும் ரொக்கமாக ரூபாய் 1,000-மும் மற்றும் ரூபாய் 50 மதிப்பு கொண்ட பதக்கமும் கொடுத்து சிறப்பிக்க அரசு ஆணை வழங்கியுள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : ஏற்கனவே இந்தப் பரிந்துரையை ஏற்றுக் கொண்டு பரிசு கொடுத்ததாகவும், விருது கொடுத்ததாகவும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நன்றி. இது தவிர தொழில் நுட்பக் கல்வி வாரியம் வேறு பரிந்துரைகள் ஏதாவது அறிவித்திருக்கிறதா? அதைப்பற்றி அரசு பரிசீலனை செய்திருக்கிறதா ?

[முற்பகல் 9-30]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : வேறு பரிந்துரைகள் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. கோவைத்தம்பி : தலைவர் அவர்களே, பல்வேறு நிலைகளில் பணியாற்றுகின்ற ஆசிரியப் பெருமக்களுக்கு மாநில அரசு விருதுகள் வழங்குவதுபோன்று ஒவ்வொரு மாவட்ட அளவிலேயும் உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி, கல்லூரி ஆகியவற்றில் நல்லொழுக்கமும், பண்பும் படிப்பும் நிரம்பப் பெற்ற மாணவர்களைத் தேர்ந்தெடுத்து விருது வழங்குவது பற்றி அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படிப்பட்ட கருத்துரை இப்போது ஆலோசனையில் இல்லை.

திரு. கோ. விஸ்வநாதன் : ஆசிரியர்களுக்கு விருது வழங்குகின்ற அரசாங்கத் திட்டத்தை அனைவரும் ஆதரித்து வரவேற்கிறார்கள் அதிலே கல்லூரி ஆசிரியர்கள் மட்டும் விடுபட்டுப் போயிருப்பது அவர்களுக்கு வருத்தமாக இருக்கிறது அதைப் பரிசீலனை செய்து அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அதன் தொடர்ச்சியாக கல்லூரியில் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் 1979–80 ஆம் ஆண்டு முதல் பத்து பேர்களுக்கு விருது வழங்கப்பட்டது அந்த விருது ஆயிரம் ரூபாய் பணமுடிப்பும், நற்சான்றும், பதக்கமும் கொண்டது.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, விருது வழங்கும் போது என்ன என்ன அடிப்படைத் தகுதிகள் இருக்க வேண்டுமென்று அரசு நிர்ணயித்து இருக்கிறது? அந்தத் தேவைகளை கல்லூரித் துறையே ஆராய்கிறதா? அல்லது வேறு துறைகள் ஆராய்கின்றனவா? அதற்காக அதிகாரப் பற்றற்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவை நியமிக்க அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நல்லாசிரியர்களைத் தேர்வு செய்வதற்காக சான்றோர்களைக் கொண்ட குழு ஒவ்வொரு ஆண்டும் நியமிக்கப்பட்டு அவர்களை அதை பரிந்துரை செய்கிறார்கள்.

திரு. இல. பலராமன் : அதிகாரப் பற்றற்றவர்களை அதிலே இணைப்பதற்கு அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கல்லூரி ஆசிரியர்களில் நல்லாசிரியர்கள் யார் என்பதைத் தேர்ந்தெடுக்கிற பொறுப்பு இருக்கிற காரணத்தினால் அந்தத் துறையிலே அனுபவம் பெற்றவர்கள், அந்தத் துறையில் பல விவரங்களைத் தெரிந்தவர்கள்தான் இருக்க வேண்டும். ஆகவே அப்படிப்பட்டவர்களைக் குழுவிலே போட வேண்டும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, நல்லாசிரியர்கள் அந்தக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்படுகிறபோது என்ன என்ன தகுதிகள் இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. நல்லாசிரியர்கள் சிலர் தேர்ந்தெடுக்கப்படாமல் விடுபட்டுப் போயிருப்பதாகப் புகார் ஏதாவது அரசுக்கு வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நல்லாசிரியர்கள் விடுபட்டுப் போனதாக தகவல் எதுவும் இது வரை எங்களுக்கு வரவில்லை. நல்லாசிரியர்கள் என்ற விருது வழங்கப்படுவதற்குக் காரணம் மாணவர்களுடைய அறிவுவளர்ச்சியில் அவர்கள் கொண்டிருக்கின்ற அக்கறை, அவர்கள் சொல்லித் தருகின்ற பாடங்களை முறையாகச் சொல்லித் தருதல், கூடுதலாக மாணவர்களுடைய நலனிலே பாடுபட்டவர்கள் என். சி. சி. என். எஸ். எஸ். போன்ற இயக்கங்களுக்குத் தலைமை தாங்கி நடத்தக்கூடியவர்கள் இப்படிப்பட்ட ஆசிரியர்களை ஊக்குவிப்பதற்காகத் தருகிறோம் சம்பளம் வாங்குகிறோம். சம்பளத்திற்காக வேலை பார்க்க

1982 பிப்ரவரி 5]

வேண்டுமென்று நிலையில் உள்ளவர்களைக் காட்டிலும் இந்த நல்லாசிரியர்கள் சமுதாயத்திற்குத் தேவை என்ற அடிப்படையில் அவர்களை ஊக்குவிப்பதற்காக இப்படிப்பட்ட நல்லாசிரியர் விருதுகள் வழங்கப்படுகின்றன.

சேலம் அரசு கலைக் கல்லூரியில் மாலை நேர முதுகலை வகுப்புகள் துவக்கும் திட்டம்.

வினா எண் 47 : செல்வி ப, விஜயலட்சுமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் அரசு கலைக்கல்லூரியில் மாலை நேர வகுப்புகளின் முதுகலை வகுப்புகள் நடத்த அரசு முடிவெடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், வரும் கல்வியாண்டில் இத்திட்டம் செயல் படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) கணிதத்தில் இளமறிவியல் பட்டத்தகுதி B.Sc. (Maths) பற்று மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றுமகணித ஆசிரியர்கள் தங்கள் கல்விதகுதியை உயர்த்திக்கொள்ள உதவும்வகையில் கணிதவியல் முது அறிவியல் (M sc., Maths.) துறையில் மாலைநேர வகுப்புகள் துவங்க பல்கலைக்கழகத்திற்குக் கோரிக்கை அனுப்பப்பட்டுள்ளது. பல்கலைக்கழகம் ஒப்புதல் தருவதைப் பொறுத்து 1981–82 ஆம் கல்வி ஆண்டில் இந்த மாலை நேர முது அறிவியல் வகுப்பு துவக்கப்படுவது அமையும். இந்த வகுப்புகளில் ஆசிரியரல்லாதோர் சேர இயலாது.

செல்வி ப. விஜயலட்சுமி : தலைவர் அவர்களே, தற்போது மாலை நேரக் கல்லூரி வகுப்புகளில் என்ன என்ன பிரிவுகள் சொல்லித்தரப் படுகின்றன என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது பற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் சொல்லலாம்.

திரு. செ. செம்மலை : தலைவர் அவர்களே, இதுபோன்ற மாலை நேர வகுப்புகளில் விஞ்ஞானம் பாடங்களை அறிமுகப் படுத்த அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பி. எஸ். சி. (மேத்ஸ்) கூட ஒரு விஞ்ஞான வகுப்புத்தான் அதை ஆரம்பித்த பிறகு மற்றவற்றைப்பற்றி யோசித்து எந்தெந்த வகுப்புகள் தேவையோ அவற்றை ஆரம்பிப்பதற்கு முயற்சி எடுக்கலாம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS